(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2(5).]** # பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 டிசம்பர் 09 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2021 ஜனவரி 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கொழும்பு, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தினதும் 6 ஆம் தரத்தினதும் ஒத்த வகுப்புகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் —

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில், புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தரம் 6 இற்கு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்பப் பிரிவிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

94/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) குருணாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருணாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

131/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச இராசயனப் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதைப் பொருட்களின் அளவு, வருட ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி போதைப் பொருட்களில் ஏதேனுமொரு அளவு போதைப்பொருள் வியாபாரிகளின் கைகளுக்கு சென்றுள்ளதென்பதையும்;

(iii) அது தொடர்பாக எவரேனும் கைதுசெய்யப்பட்டுள்ளார்களாயின் அவர்களின் பெயர்கள் மற்றும் பதவிப்பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

164/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் தொகைகள் வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கருத்திட்டங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கடன் தொகைகளுக்கான தவணைப்பணம் செலுத்துவதற்காக அரசாங்கம் தயார் செய்துள்ள வேலைத்திட்டம் யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

219/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) சுகாதார துறையுடன் தொடர்புடைய வகையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள் / பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இரசாயனங்கள் / பொருட்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இரசாயனங்கள்/பொருட்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இரசாயனங்கள்/பொருட்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

415/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் தொடர்பாக நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) இளம் தவறாளிகள் மற்றும் சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(iii) முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து வழக்குகளை முடிவுறுத்துவதற்கு சராசரியாக எடுக்கும் கால அளவினையும்;

(iv) தாமதத்துக்கான காரணங்கள் மற்றும் தாமதங்கள் எங்கு இடம்பெறுகின்றன என்பதையும் வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளையும்;

(v) நீதிமன்றங்களுக்கு சிறுவர்களை கொண்டுசெல்வதற்கு நடைமுறையில் உள்ள ஏற்பாடுகளையும்;

(vi) சிறுவர்கள் நீதிமன்றங்களில் பிரசன்னமாக இருக்கும்போது, அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்பேணல் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான இளம் தவறாளிகளின் —

(i) முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) முறைப்பாடு பதியப்பட்டதிலிருந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் வரையும் மற்றும் குற்றச்சாட்டு வாசிக்கப்பட்டதிலிருந்து விசாரணையின் முடிவு வரையுமான கால அளவையும்;

(iii) குற்றத் தீர்ப்புகள், விடுதலைகள் மற்றும் விடுவிப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும்;

அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

431/2020

கௌரவ சாந்த பண்டார,— பெருந்தெருக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதையும்;

(ii) அந்த அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அளவ்வ மற்றும் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கப்படுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த சாலை நிர்மாணிப்பதற்காக மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிக்கப்புகளுக்கென நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்கத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

457/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் கல்கிரியாகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவின் கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவில் மகப்பேற்று கிளினிக் நடாத்துவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் உள்ள எவ்வித வசதியும் இல்லாத சிறிய அறையொன்றில் குறித்த க்ளினிக் நடாத்தப்படுகின்றதென்பதையம்;

(iii) அக்காரணத்தினால், கர்ப்பிணித்தாய்மார்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கல்கிரியாகம குடும்ப சுகாதாரச் சேவைகள் உத்தியோகத்தர் பிரிவுக்கு மகப்பேற்று க்ளினிக் நிலையமொன்றை வழங்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

526/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் இன்றளவில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

551/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் பயன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

மாவட்ட ரீதியாக தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் தேவைப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் பற்றி கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளடங்கும் பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி நீர் வழங்கல் திட்டங்களுக்கான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/2020

கௌரவ உதயன கிரிந்திகொட,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை —

(i) கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செலவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(v) கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முறைகேடுகள்/ தாமதம் காரணமாக அதனை நிறைவுசெய்ய முடியுமென உத்தேசிக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் —

(i) ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தாமதம் இடம்பெற்றுள்ள நிறுவனங்களுக்கு அதன் நிர்மாணப் பணிகள் மீள வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கண்டி நகருக்கு அண்மித்த இறுதி நுழைவு காணப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) கண்டியிலிருந்து கலகெதர வரையான வீதியில் காணப்படுகின்ற கடுமையான வாகன நெரிசல் காரணமாக அதன் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு 30-45 நிமிடங்கள் வரை எடுப்பதால் கண்டி பிரதேச மக்களுக்கு இலகுவாக அதிவேக நெடுஞ்சாலைக்கு நுழைவு வீதி அமைக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நுழைவுகள் நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

720/2020

கௌரவ கயந்த கருணாதிலக்க,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்காக 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் செலுத்தப்படுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டுக்கான கணக்கு வாக்குப் பணத்தின் மூலம் அதிகரிக்கப்படவிருந்த திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சம்பளம் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளத்தையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பெறுநர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

730/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் —

(i) வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் தேவை யாது என்பதையும்;

(ii) ஆகக்கூடிய நன்னீர் மீன் அறுவடையைப் பெற்றுத்தரும் மாவட்டம் யாது என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மாதாந்த நன்னீர் மீன் அறுவடை எவ்வளவு என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில், மேற்படி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்பட்ட மீன் அறுவடை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) விடப்பட்ட மீன் குஞ்சுகளுக்கு ஒப்பீட்டு ரீதியாக பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தி அடைவாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) சிறிய குளங்களைச் சார்ந்து நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

874/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாகிஸ்தான், நேபாளம், பங்காளதேசம், மாலைதீவு மற்றும் மியன்மார் ஆகியவற்றை உள்ளிட்ட 80 நாடுகள் கோவிட் - 19 தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) அவசர உதவிகளைப் பெற்றிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம், கோவிட் - 19 தொற்று காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கோரப்பட்டுள்ள உதவியின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட உதவி கோரப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் பதிலளித்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சர்வதேச நாணய நிதியத்தின் பதிலையும்;

(vi) இதுவரை நிவாரணத்தைப் பெற்ற 80 நாடுகள் போலல்லாது இலங்கை அரசாங்கம் நிவாரணத்தைப் பெற்றிருக்காமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஜனவரி 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

23/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்குரிய ஒவ்வொரு நிறுவனத்தினதும் வருடாந்த வருமானம், வருடாந்த செலவு ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்புக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பதவிப் பெயர்கள் என்பனவற்றை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினுள் —

(i) சுதந்திரமானதோர் ஊடகக் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

109/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளின் எண்ணிக்கை;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளில் சில இலங்கையில் ஓட்டத்தில் ஈடுபடுத்த பொருத்தமற்றவை என்பதை அவர்அறிவாரா?

(இ) (i) ஆமெனின், புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகள் என்பவற்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான செயற்பாடு சார்பாக நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் புகையிரதப் பெட்டிகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பிரகாரம், அரசாங்கத்தினால் சேமித்துக்கொள்ளக்கூடிய தொகை எவ்வளவு;

என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

132/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள அரசாங்கத்திற்கு உரித்தான அரிசி களஞ்சியப்படுத்தும் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 முதல் இதுவரையில் மேற்படி ஒவ்வொரு நிலையத்திலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அரிசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதயும்;

(iv) மேற்படி நிலையங்களில் எந்தவிதப் பயன்பாடுமின்றி கைவிடப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி நிலையங்களை மீளத் திறப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

552/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் தற்சமயம் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

561/2020

கௌரவ சாந்த பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அளவ்வ புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்கான நிர்மாணப் பணிகள் பல வருடங்களாக தாமதமடைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அளவ்வ புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்குரிய நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

761/2020

கௌரவ வடிவேல் சுரேஷ்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை டிப்போவினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பதுளையிலிருந்து தெமோதர ஊடாக வேவெல்ஹின்ன, பதுளையிலிருந்து மடுல்சீமை குருவிகொல்ல ஊடாக கொக்காகல வரை மற்றும் பதுளையிலிருந்து ரொக்கதென்ன, பதுளையிலிருந்து ரொசட் வரையுமான பஸ் சேவைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக தோட்டப்புறப் பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பதுளை நகருக்குச் செல்லும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) அச்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க்கும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஜனவரி 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

24/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் —

(i) உயிரிழந்தவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) காயமடைந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தாக்குதலில் காயமடைந்த மற்றும் நீண்டகால சிகிச்சை தேவைப்படும் நபர்கள் தனித்தனியே இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) இவ்வாறு இனங்காணப்பட்டவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் மருத்துவ மற்றும் ஏனைய உதவிகள் யாவை என்பதையும்;

(iii) இத்தாக்குதல் காரணமாக முழுமையாக அங்கவீனமுற்றோர்களுக்கு விசேட உதவித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி திட்டம் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றையளவில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இழப்பீடு மற்றும் அளிப்புக்கள் தனித்தனியே யாவையென்பதையும்;

(ii) மேற்படி தாக்குதலில் உயிரிழந்தவர்களில் தங்கி வாழ்வோருக்கு நீண்டகால அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்ப்பார்க்கும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

133/ '2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. ரவிநாத ஆரியசிங்க இலங்கை வெளிநாட்டு சேவைக்கு நியமனம் பெற்ற திகதி மற்றும் ஓய்வு பெற்ற திகதி யாது என்பதையும்;

(ii) அவர் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(iii) அவரை மீண்டும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்துகொள்ளும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் காரணமாக இலங்கை வெளிநாட்டுச் சேவையிலுள்ள இளம் அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

167/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் காணி உரித்துக்கள் அற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது?

(ii) மேற்படி வீடுகளிற்கு உரித்துக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் என்ன;

என்பன பற்றி இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

185/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில், தமிழ்ச்சோலை வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கியதென்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தமிழ்ச்சோலை வித்தியாலயத்திலிருந்து இறுதியாக க.பொ.த.(சா.த) பரீட்சைக்கும் 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கும் மாணவர்கள் எந்த ஆண்டில் தோற்றியிருந்தார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது, மேற்குறிப்பிட்ட பாடசாலை என்ன பெயரில் அழைக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) இன்றளவில் இப்பாடசாலைக்குப் பயன்படுத்தப்படுகின்ற பெயர் யாரால், என்ன காரணத்திற்காக, எந்த திகதியில் மாற்றப்பட்டதென்பதையும்;

(iii) இவ்வாறு பெயர் மாற்றப்பட்ட இப்பாடசாலைக்கு ஸ்தாபகர் அல்லது நிறுவனர் என்று தனிநபரின் பெயரைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

226/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இறப்பர் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இறப்பரை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இறப்பரை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

263/2020

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 - 2019 பெரும்போகத்தின் போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மாத்தறை மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு சேதம் ஏற்பட்டதென்பதையும்;

(ii) அதற்கான நட்டஈடுகள் இதுவரையில் செலுத்தப்படவில்லையென்பதையும்;

(iii) அதன் காரணமாக விவசாயிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த போகத்தின் போது மாத்தறை மாவட்டத்தில் சேதமடைந்த செய்கை நிலப் பரப்பு யாதென்பதையும்;

(ii) அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இதுவரை நட்டஈடு செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

425/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஏற்கனவே நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவரும் வயம்ப கால்வாய் கருத்திட்டத்தின் தற்போதைய நிலை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு கையப்படுத்தப்பட்ட இறையிலிக் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுதல் முறைகேடாக அமைந்துள்ளதென்பதையும்;

(ii) விஹாரைகளுக்கு சொந்தமான காணிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் போது மேற்படி காணிகளை இருப்பாட்சி செய்பவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு போதுமானதாக இல்லையென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், இவ்விடயத்தில் நீதியான முறையில் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) ஏற்கனவே நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவரும் “ரங்வெடியாவ” பகுதியில் கால்வாயின் ஆழம் 40 அடியையும் விட அதிகமாக இருப்பதால் அதற்கு அண்மித்த குடிநீர் கிணறுகள் மற்றும் விவசாயக் கிணறுகள் வற்றிப்போனதால் மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) ஆமெனில், இவ்வாறு இன்னலுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு துரிதமாக தீர்வுகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அத்தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

484/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற நீர்ப்பாசனத் திட்ட முறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசனத் திட்ட முறையினூடாகவும் உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்ப்பாசனத் திட்ட முறைகளை அண்மித்தாக தமது வாழ்வாதாரத்தை அமைத்துக்கொள்கின்ற மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

527/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் கல்வி சாரா பணியாட்டொகுதியில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, உரிய பதவிப் பெயர்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

553/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வீதிகள், மாகாண விதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் நீளம் பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளில் காபட் இடப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் தார் இடப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வீதிகளில் காபட் அல்லது தார் இடப்படாத வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உள்ளூராட்சி மன்றங்களின் மட்டத்தில் மேற்படி கிராமிய வீதிகளின் நீளம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

562/2020

கௌரவ சாந்த பண்டார,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழில்துறையை மேம்படுத்த வேண்டுமென்பதையும்;

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக தேசிய மரபுரிமைகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில், 04 இராசதானிகள் அமைந்துள்ளதுடன் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக அவ்விடங்களைப் பயன்படுத்துவதற்கு தற்போது ஏதேனும் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தம்பதெனிய இரஜமகா விகாரை மற்றும் தம்பதெனிய இராசதானி என்பன சுற்றுலா வரைபடத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலனறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை மாவட்டத்தில் யானை - மனிதன் மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை - மனிதன் மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

762/2020

கௌரவ வடிவேல் சுரேஷ்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது தொழிற்படும் நிலையிலுள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது தொழிற்படாத நிலையிலுள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவர்கள், ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கு பிணியாளி வண்டிகளை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது தொழிற்படும் நிலையிலுள்ள மற்றும் தொழிற்படாத நிலையிலுள்ள பெருந்தோட்ட வைத்தியசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அனைத்து பெருந்தோட்ட வைத்தியசாலைகளையும் அபிவிருத்தி செய்தல் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

875/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக ஏனைய அரசாங்கங்கள் மற்றும் பல்தரப்பு முகவராண்மைகள் போன்றவற்றிடமிருந்து பல கோரிக்கைகளை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இலங்கை அரசாங்கத்தால் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கைகளின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறித்த கோரிக்கைகளுக்கு பெறப்பட்ட பதில்களையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலுவை நன்கொடை வழங்கல்களையும்;

(ii) மேற்குறித்த நன்கொடை வழங்கல்களின் பெறுமதியையும்;

(iii) இலங்கை அரசாங்கம் மேற்குறிப்பிட்ட நன்கொடை வழங்கல்களை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

879/2020

கௌரவ (கலாநிதி) சுரேந்திர ராகவன்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசியல் கைதிகள் இருப்பார்களாயின் அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கையானது இனவாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) அவர்களுள் ஆகக்கூடிய காலம் சிறையிலுள்ளவரின் பெயர் யாதென்பதையும்,

(iv) அக்கைதி சிறையிலிடப்பட்டு தற்போது எவ்வளவு காலம் கடந்துள்ளதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சிறைக்கைதிகள் இருப்பார்களாயின் அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கையானது இனவாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) அவர்களுள் ஆகக்கூடிய காலம் சிறையிலுள்ளவரின் பெயர் யாதென்பதையும்;

(iv) அக்கைதி சிறையிலிடப்பட்டு தற்போது எவ்வளவு காலம் கடந்துள்ளதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களின் வழக்கு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி அவர்களுக்கு நீதி நிலைநிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பலாத்காரமாக இணைத்துக்கொள்ளப்பட்ட சிறுவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் சமூகமயப்படுத்தப்படுவார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2021 ஜனவரி 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

25/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு நீக்கப்பட்ட புகையிரத பெட்டிகளில் திருத்தப்பட்டு மீண்டும் சேவைக்குள் இணைக்கப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேவையிலிருந்து நீக்கப்பட்ட எஞ்சிய புகையிரத பெட்டிகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

134/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு தூதுக் குழுக்களில் சேவையாற்றும் வணிக திணைக்களத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்தையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஊழியர்களினதும் பெயர், பதவிப் பெயர், சேவையில் ஈடுபட்டுள்ள தூதுக்குழுவின் பெயர் மற்றும் பதவியின் பொறுப்புக்களைத் தனித்தனியே குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களினால் இலங்கைக்கு ஆற்றப்படும் சேவை தொடர்பாக அமைச்சு திருப்தியடைகின்றதா என்பதையும்;

(iv) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி உத்தியோகத்தர் களிடமிருந்து கூடுதலான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சின் நோக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

171/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லோ லெவல் வீதியில் அம்பதலே தொடக்கம் ஒருகொடவத்த வரையிலான பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீதிக்கான அபிவிருத்திப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு எஞ்சியுள்ள அளவு;

(ii) மேற்படி வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுள் ஏற்கனவே நட்ட ஈடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் தொகை;

(iii) மேற்கொண்டும் நட்ட ஈடுகள் வழங்கப்படவிருக்குமாயின் குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் தொகை மற்றும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதனை;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

264/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத்தொழில் சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக சட்டத்திற்கமைவாக பல்கலைக்கழகக் கல்லூரிகள் பட்டம் வழங்கும் நிறுவனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) தற்போது இந்நிறுவனங்களினால் பட்டத்திற்குப் பதிலாக உயர் டிப்ளோமா மட்டும் வழங்கப்படும் மூன்று வருடகால கற்கைநெறிகள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(iii) பட்டப் படிப்பு கற்கைநெறிகளை நடாத்துவதற்குத் தேவையான விரிவுரை மண்டபங்கள், நூலகங்கள், விரிவுரையாளர்கள் உட்பட ஏனைய வசதிகள் இந்நிறுவனங்களில் இல்லையென்பதையும்;

(iv) இதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளை நிறைவுசெய்துள்ள மற்றும் தற்போது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாக அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரச்சினைகளை துரிதமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் செலவிட எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

458/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பெருந்தெருக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரத்திலிருந்து குருநாகல் நகருக்கு செல்லக் கூடிய குறுகிய வழி புல்னேவ பொல்பிதிகம பாதை என்பதையும்;

(ii) அப்பாதையானது தலாவை சந்தியிலிருந்து பொல்பிதிகம சந்தி வரையிலான பகுதி தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாதையின் மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

595/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின், நெடுந்தீவில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையான நெடுந்தீவு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரம் யாது என்பதையும்;

(ii) கடந்த 08 வருடங்களாக அந்த வைத்தியசாலைக்கென இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக நெடுந்தீவில் வாழும் ஏழை மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் எத்திகதியில் நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

606/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாக 2019.04.08ஆம் திகதி பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிவித்தல் 2019 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு (புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்கள்) தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு அடிப்படையானதா என்பதையும்;

(ii) பல்கலைக்கழக அனுமதிகளுக்கான மேலே சொல்லப்பட்ட முறைமையில் ஏதேனும் மாற்றங்கள் உள்ளனவா எனவும்;

(iii) அவ்வாறெனில், அத்தகைய மாற்றத்துக்கான ஏதேனும் நியாயங்களையும்;

(iv) அந்த மாற்றங்கள் எவ்வாறு உள்ளடக்கப்படும் என்பதையும்;

(v) பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களிலிருந்து எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதைத் தீர்மானிப்பதற்கான முறைமை மற்றும் அதன் பிரயோகத்தை உள்ளிட்ட பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான எல்லா விபரங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிட முடியுமா என்பதையும்;

(vi) இந்த விபரங்கள் ஏன் பகிரங்கமாக வெளியிடப்படுவதில்லை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

609/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1818 மற்றும் 1819 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஊவ – வெல்லஸ்ஸ போராட்டத்திற்கு ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து தலைமைத்துவம் வழங்கிய வீரர்கள் பற்றிய தகவல்கள், தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தில் காணப்படாமை தொடர்பில் தங்கள் அமைச்சின் அலுவலர் ஒருவரினால் ஆய்வொன்று நடாத்தப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த ஆய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீரர்கள் இராஜதுரோகிகளாக பெயரிடப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் மேற்படி வீரர்களை, தேசிய வீரர்களாக பெயரிடுவது பொருத்தமானதென முன்மொழிந்திருப்பது அப்போதைய தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் நீதி அமைச்சின் மேலதிகச் செயலாளருக்கு (சட்டம்) அனுப்பப்பட்டுள்ள 2020.01.14 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

640/2020

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு 14, கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள மேமா/கொ/ ஜயந்தி வித்தியாலயமானது, பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி பயிலும், தரம் 1 முதல் தரம் 11 வரை வகுப்புக்கள் நடாத்தப்படும் ஒரு பாடசாலையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து பார்ப்பதற்காக பொறுப்புக் கூறுவோர் இறுதியாக இப்பாடசாலையை கண்காணித்துள்ள திகதி யாது;

(ii) பாடசாலையைச் சுற்றியுள்ள அபாயகரமான மதிலை புனரமைத்தல், உள்ளக வடிகால் முறைமை, கட்டடத்துக்கான வலை பாதுகாப்பு, உள்ளக பிரவேசப் பாதை, நீர் மற்றும் மின்சார முறைமை, வகுப்பறைகள், மலசலகூடம் மற்றும் மலசல கூட வசதி, கணினி தேவைப்பாடுகள், ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் காவலாளி பதவியில் நிலவும் ஒரு வெற்றிடம் போன்ற தேவைப்பாடுகள் தொடர்பில் கவனஞ் செலுத்துவாரா;

(iii) ஆமெனில், மேற்படி பாடசாலையில் நீண்ட காலமாக நிலவும் குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

731/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அனுராதபுரம் மற்றும் பொலனறுவை போன்ற மாவட்டங்களில் நிலவுகின்ற வறட்சி காலநிலை மாறி மீள மழை பெய்யத் தொடங்கியதும் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(அ) (i) இலங்கையில் இதுவரை டெங்கு நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) டெங்கு நுளம்புக் குடம்பிகளை ஒழிப்பதற்கு 2008/2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தினால் B.T.I பக்றீரியாவை கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கு சாத்தியம் இல்லாத பட்சத்தில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) B.T.I பக்றீரியாவுக்குப் பதிலாக டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றுவழி என்ன என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

775/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதுருவெல நகரத்தை விரிவாக்கும் கருத்திட்டத்தின் கீழ், விசேட பொருளாதார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் வயல் நிலங்களையும் மேட்டு நிலங்களையும் சுவீகரித்துள்ளதா;

(ii) அவ்வாறாயின், மேற்படி வயல் நிலங்கள் மற்றும் மேட்டு நிலங்களின் அளவு, உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், ஒவ்வொரு நபருக்கும் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை, அவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் கீழ் பிரதான புகையிரத வீதியின் இருமருங்கிலும், முழுமையாக, பகுதியளவில் அல்லது ஒரு பகுதி மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டுள்ள வியாபார நிலையங்கள் உள்ளனவா;

(ii) அவ்வாறாயின், மேற்படி வியாபார நிலைய உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி உரிமையாளர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கியுள்ளதா;

(iv) அவ்வாறாயின், ஒவ்வொரு நபருக்கும் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை, அவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

852/2020

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் சமுதாய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டமொன்று நடைமுறையிலுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்படவுள்ள வருடங்கள் யாவையென்பதையும்;

(ii) இரத்தினபுரி மாவட்டத்தில் இக்கருத்திட்டத்திற்காக மாவட்ட அலுவலகமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதன் பதவியணி யாதென்பதையும்;

(iv) அதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்தும் வெளியிலிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) வெளியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(vi) மேற்படி நிறுவனம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் நிருவாகச் செலவினம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் தற்போது நடைமுறைபடுத்தப்படுகின்ற நீர் விநியோகத் திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தப்படும் நீர் விநியோகத் திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(v) அக்கருத்திட்டத்தின் மூலம் துப்பரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

876/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் மீளச்செலுத்துதல் தொடர்பாக சுதந்திரம் அடைந்ததிலிருந்து கறைபடாத வரலாற்றை பேணி வந்ததாக மீண்டும் மீண்டும் கூறியதையும்;

(ii) இலங்கையின் மீளச்செலுத்தும் இயலுமையை மூடீஸ் கடன் தரப்படுத்தும் முகவராண்மை B2 இலிருந்து Caa1 வரை இரு மட்டங்களால் தரவிறக்கம் செய்துள்ளமையையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையின் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வட்டி மற்றும் கடன்தீர்ப்புக் கொடுப்பனவுகளின் மொத்தப்பெறுமதியையும்;

(ii) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையின் பெறுமதியையும்;

(iii) 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான அரசாங்கத்தின் வருமானத்தையும்;

(iv) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வருமானத்தின் பெறுமதியையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தவணைத் தவறுகையை தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் கடனை மீளச்செலுத்தத் தவறுமாயின் இலங்கையின் பொருளாதாரம் மீதான தாக்கத்தையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

881/2020

கௌரவ (கலாநிதி) சுரேந்திர ராகவன்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மீன் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அத்தேவையில் உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 1982 ஆம் ஆண்டு வட கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் உற்பத்தியானது இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த நிலைமை முடிவடைந்து தற்போது 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் 1982 ஆம் ஆண்டு அம்மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மீன் அறுவடை இன்னும் கிடைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இதுவரை மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கடந்த 15 வருட காலப்பகுதியில் ஏனைய மாகாணங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்திற்கான நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த உதவியின் தன்மை மற்றும் அந்த உதவிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் வழங்கும் கடன் தொகைகளைக் கொண்டு இத்துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) அதன்மூலம் கிடைக்கப்படும் மேலதிக அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?